உ

சிவமயம்

# சந்தாநுசாரியர்

திருமயிலை

சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை

எழுதியது

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை.

அக்ஷய ஹூ

சிவமயம்

# முகவுரை

" முத்தாந்த வீதி முளரிதொழ மன்பருக்கே
சித்தாந்த வீதி வருந்தேவே பராபரமே "

சந்தானசாரியர் யாவரென்றும் அவர்கள் திவ்விய சரித்திரங்கள் யாவையென்றும் அறியாத சைவரும் இக்காலத்தில் உளரன்றே ? கிறிஸ்தவர், மகமதியர் முதலிய புறப்புறச் சமயிகளுள்ளே தங்கள்தங்கள் மதாசாரியர்களை அறியாதார் இலரன்றே? இவ்வேறுபாட்டிற்குக் காரணம் சைவசமயிகளிடத்துச் சமயாபிமானக் குறைவும் மற்றைச் சமயிகளிடத்து அவ்வபிமான மிகுதியுமேயாம். விசனிக்கத்தக்க இத்தாழ்வான நிலையை அடைந்துள்ள நமது சைவசமயத்தவர்களை நல்வழிப்படுத்தக் கூடிய சாதனங்களில்ஒன்று சைவப் பெரியார்களது அதியற்புத சரித்திரங்களைச் சுருக்கமாகச் சாமானிய அறிவினரும் தெரிந்து கொள்ளக்கூடிய எளியநடையில் எழுதிச் சிறு புத்தகமாக அச்சிட்டுத் தமிழ்நாடெங்கும் பரவச்செய்தலேயாம். இதனை எவரும் மறுக்க மாட்டாரென்பது திண்ணம். இத்தன்மை

யதாய சிவதொண்டை மேற்கொண்டு, "சைவ லகுவசன மாலை" என்னும் வரிசையில் சமயாசாரியர் நால்வர் சரித்திரத்தை முதலாவதாகச் சிலமாதங்களுக்கு முன்னர் வெளியிட்டேன். அவ்வரிசையின் இரண்டாம் புத்தகமாக இப்போது சந்தாநுசாரியர் சரித்திரத்தையும் வெளியிடலானேன். இதனை அச்சிடக் கொழும்புநகரத்துச் சிவநேயச்செல்வர்களாகிய **ஸ்ரீமான் - சி. போ. சண்முகம் பிள்ளை அவர்கள்** பொருளுதவி செய்தார்கள். அவர்கள் தருமசிந்தனையையும் சைவப்பற்றையும் பெரிதும் பாராட்டுகின்றேன்.

இது, நாலைந்து வருடங்களுக்கு முன்னர்க் குவாலாலம்பூர்ச் சைவாபிமானிகள் விருப்பத்தின்படி, அவ்வூர்ச்சீமான் வீ. சின்னையா அவர்களால் இலகுலேகமாக அச்சிடப்பெற்றது.

இந்நன்முயற்சியின்கண் என்னைத் தூண்டிவிட்ட எனது அன்பார்ந்த நண்பர், யாழ்ப்பாணத்துச் சுழிபுரம் ஸ்ரீமத் - சு. சிவபாதசுந்தரம் பிள்ளை அவர்களுக்கு மிகுதியும் கடப்பாடுடையேன்.

திருமயிலை,
அக்ஷய ௵
பங்குனி ௴

சே. வே. ஜம்புலிங்கம்

சிவமயம்

# சந்தாநுசாரியர்

" முத்தாந்த வித்தே
முளைக்கு நிலமாயெழுந்த
சித்தாந்த மார்க்கச்
சிறப்பே பராபரமே "

சைவ சந்தான ஆசாரியராவார் சைவ சமயத்தின் வழியை (குருசீடக் கிரமமாக) விளக்கிக் காட்டுபவர். சந்தானம்-தொடர்ச்சி. அவர்களாவார் :—மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞானசம்பந்த சிவாசாரியர், உமாபதிசிவாசாரியர் என்னும் நால்வர். இவர்கள், சைவசமய நூல்களைத் தமிழில் இயற்றி அச்சமயக் கோட்பாடுகளை

அனைவரும் அறியும்படி வைத்தமையால், சைவசமயத்தின் பாரம்பரிய ஆசாரியராகக் கருதப்படுகின்றனர். இவர்கள் சரித்திரச் சுருக்கம் வருமாறு :—

## மெய்கண்ட தேவர்

" பொய்கண்டார் காணாப்
புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருள்
மேவுநா ளெந்நாளோ "

மெய்கண்டதேவர், திருப்பெண்ணுகடம் என்று வழங்கும் திருத்தூங்கானைமாடம் என்னுந் திருப்பதியிலே வேளாள குலத்திலே, அச்சுத களப்பாளர் என்னும் சிவபத்தருக்குக் குமாரராய் அவதரித்தவர். திருவெண்காட்டுச் சுவேதவனப் பெருமானது திருவருளாற் பிறந்தமையால், இவருக்கு அப்பெருமானுரின் திருப்பெயரே இடப்

பட்டது. இவர் திருவெண்ணெய் நல்லூரிலே தமது மாமனர் வீட்டிலே வளர்க்கப்பட்டவர். அப்படி வளர்ந்து வரும்போது ஒருநாள் அவ்வழியாகச் சென்ற திருக்கைலாச வாசராகிய பரஞ்சோதி மாமுனிவர், இரண்டு வருடக் குழந்தையாக வீதியில் விளையாடிக் கொண்டிருந்த இந்நாயனரது மேலான நிலையைக் கண்டார். உடனே அவரை யழைத்துச் சிவதீக்ஷை செய்து மெய்கண்டதேவர் *என்னும் திருநாமஞ் சூட்டிச் சிவஞான போதத்தை †உபதேசித்தருளினர்.

---

* திருஞான சம்பந்தரைப்போல் இவரும் சாமுசித்தரேயாவர். சாமுசித்தராவார் : முற்பிறப்பிலே செய்த புண்ணியமேலீட்டினலே ஞானவுணர்ச்சியுடன் பிறந்து சிவோபாசனை பண்ணுவோர்.

† இதுவே மாணிக்கவாசகருக்குச் சிவபெருமானல் குருந்தமர நீழலில் உபதேசிக்கப்பட்ட நூல்.

பிள்ளையார் அவ்வுபதேசத்தின் பலனைச் சிவஞானபோதம் என்னும் அரும் பெருநூலைத் தமிழிலே பன்னிரண்டு சூத்திரமாகச் செய்ததோடு வார்த்திகம் என்னும் பொழிப்புரை, உதாரணச் செய்யுட்கள், சூர்ணிக் கொத்து என்னும் அட்டவணை ஆகிய இவற்றையும் திருவெண்ணெய்நல்லூர்ப் பொல்லாப் பிள்ளையாரது திருவருளே துணையாகக் கொண்டு இயற்றியருளினார்.

இவருடைய மாணுக்கர் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவர்களுட் சிறந்தவர்:--அருணந்தி சிவாசாரியரென்னும் சகலாகமபண்டிதர், மனவாசகங் கடந்தார், சீகாழிச் சிற்றம்பலநாடிகள் முதலியோர். இவர் பரிபூரணமடைந்த தினம்: ஐப்பசிச் சுவாதி.

மெய்கண்டான் = அத்துவித உண்மையை அறிந்தோன்.

## அருணந்தி சிவாசாரியர்

" பாதிவிருத்தத் தாலிப்பார்
விருத்தமாக வுண்மை
சாதித்தார் பொன்னடியைத்
தான்பணிவ தெந்நாளோ "

மெய்கண்ட நாதரது மாணவருள் முதல்வராகிய இவர் திருத்துறையூரிலே ஆதிசைவ குலத்திலே பிறந்தவர். வேதசிவாகமங்களை நன்றாய்க் கற்றறிந்தவர். இதனாலேயே இவருக்குச் சகலாகம பண்டிதர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. தமது ஆசிரியர் செய்தருளிய சிவஞானபோதத்தின் வழி நூலாகச் சிவஞான சித்தியாரையும், இருபாஇருபஃது என்னும் மற்றொரு நூலையுஞ் செய்தருளினர். இவர் இயற்றிய சிவஞான சித்தியாருக்குச் சமானமான வேறு நூல் இல்லையென்று திட்ட

மாய்க் கூறலாம். "சிவத்திற்குமேற் றெய்வமில்லை, சிவஞானசித்திக்குமேற் சாத்திரமில்லை" என்னும் பழமொழி இதனை மெய்ப்பிக்கும்.

இப்பெரியார் திருத்துறையூரிலேயே பரிபூரணம் எய்தினரென்ப. குருபூசைத் தினம்: புரட்டாசிப் பூரம்.

## மறைஞான சம்பந்தர்

"சிற்றம்பல மன்னுஞ்
சின்மயராந் தில்லைநகர்க்
கொற்றங் குடிமுதலைக்
கூறுநா ளெந்நாளோ"

அருணந்தியார் மாணாக்கராகிய இவர் திருப்பெண்ணாகடத்திலே பிராமண குலத்திலே பிறந்தவர். வேத சிவாகமங் களை நன்றாய்க்கற்றுத் தெளிவுபெற் றிருந்தமையால், மறைஞான சம்பந்தர் என்னும்பெயர் இவருக்கு வழங்கியது போலும்! உமாபதி சிவாசாரியருக்கு

உபதேசஞ் செய்தருளி, சிதம்பரத்தைச் சார்ந்த திருக்களாஞ்சேரியிலே சில காலம் மௌனகுருவாய் வீற்றிருந்து, பிறகு சிவபதம் அடைந்தவர். இவர் மோனநிலை கைவரப் பெற்றவராதலால், யாதொரு நூலுஞ் செய்ததாகத் தெரியவில்லை. இவரது குருபூசைத் தினம்: ஆவணி உத்தரம்.

## உமாபதி சிவாசாரியர்

" குறைவிலருண் ஞானமுதல்
கொற்றங் குடியடிகள்
நறைமலர்த் தாட்கன்பு
பெற்றுநாமிருப்ப தென்னாளோ "

மறைஞான சம்பந்தர் மாணக்கராகிய இவர் தில்லைவாழந்தணர்கள் மூவாயிரவரில் ஒருவர். இவர் சிதம்பரத்தையடுத்த கொற்றவன்குடியில் வசித்துவந்தமையால் கொற்றங்குடி முதலியார் என்று அழைக்கப்பட்டார். இப்பெரி

யார் வேத சிவாகமங்களைச் சந்தேக மறக் கற்றுத்தேர்ச்சி பெற்றவர். வட மொழியிலும் தமிழிலும் பெரும் புலமைவாய்ந்தவர். சிவபத்தியிலும் அடியார் பத்தியிலும் மிகச்சிறந்தவர்.

ஒருநாள் இவர் நடராஜப் பெருமானைப் பூசித்துத் திரும்பும்போது அக்காலத்தில் இவருக்கு ஏற்பட்ட சிவிகை, தீவர்த்திமுதலான விருதுகளோடு வீதி வழியே சென்றனர். இவரது ஆடம்பரத்தைக்கண்ட மறைஞான சம்பந்தர் "பட்ட கட்டையிற் பகற்குருடன் போகின்றான் பாருங்கள்" என்று குறிப்பாகக் கூறினர். இதனைக்கேட்ட நாயனார் உடனே சிவிகையை விட்டிறங்கி மறை ஞானசம்பந்தரை வணங்கி அவர் வழி நடப்பாராயினர். மறைஞானசம்பந்தர் சுவாமிகளது மேலான நிலையை உலகத்தாருக்கு வெளிப்படுத்தும் பொருட்

டுத் தாம் ஒருநாள் புடைவை நெய் பவர் வீதியையடைந்து அவர்களில் ஒருவரிடம் கூழைவாங்கி யுண்டார். அவர் உண்ணுங்கால் அவரது முழங்கை வழியாக ஒழுகிய சேடத்தை அருகே யிருந்த உமாபதியார் ஏற்றுப் பேரானந்தத்துடன் பருகினர். இச்செயற் கருஞ் செய்கையை அறிந்த மற்றைத் தில்லைவாழந்தணர்கள் ஆசாரியரது நிலையை நன்குணராது அவரைப் பழித் தனரென்றும், நடேசப் பெருமானைப் பூசிக்க வொட்டாதபடி அவரைத் தடுத் தனரென்றும் கதை வழங்குகின்றது.

சிவாசாரிய சுவாமிகளிடம் திருவருள் விளங்கியதென்பதற்குப் பின்வரும் அற்புதங்களே சாட்சியாகும். —

(க) பெற்றான் சாம்பான் என்னும் சிவபக்தருக்குச் சபாநாயகரது திரு

முகத்தின்படி * முத்தி கொடுத்தரு ளினமையும், பின்பு அப்பெற்றான் சாம பானுடைய மனைவியும் அரசன் முத லாயினாரும் காணப் பரிபக்குவமடைந் திருந்த ஒரு முள்ளிச்செடிக்கு முத்தி கொடுத்தருளினமையும்;

(உ) மார்கழிமாதத் திருவிழா ஒன் றிலே ஏறாது தடையுற்று நின்ற கொடியை "கொடிக்கவி" என்னும் பிர பந்தம் பாடி ஏறச்செய்தமையும்;

---

*"அடியார்க் கெளியன்சிற்
றம்பலவன் கொற்றங்
குடியாற் கெழுதியகைச்
சீட்டுப் - படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப்
பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை"
என்பது திருமுகப் பாசுரம்

(௯) இவர் இயற்றியருளிய சிதம்பர [மா]ன்மியத்துள் ஒன்றாகிய கோயிற் [பு]ராணம் அரங்கேறப்பெறாது பேட கத்துள் இருந்தபொழுது, தாம் உமா பதியார் பேடகத்துள் இருப்பதாகச் சபாநாதவள்ளலார் தில்லைவாழந்தணர் களுக்கு அறிவித்தமையும், அவர்கள் ஆசாரிய சுவாமிகளிடம் வந்து புரா ணத்தை அரங்கேற்றச் செய்தமையுமே யாம்.

இவர் இயற்றிய நூல்கள்:— * சித் தா[ந்]த அட்டகம், கோயிற்புராணம், திருத்தொண்டர் புராணசாரம், சேக்கி ழார் புராணம், திருமுறைகண்ட புரா

---

* சித்தாந்த அட்டகமாவன :— சிவப்பிர காசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் எட்டுச் சாத்திரங்களாம்

ணம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக் கோவை, பௌட்கராகம வடமொழி வியாக்கியானம் முதலியன.

சுவாமிகள் காலம் இப்போதைக்கு அறுநூறு வருடங்களுக்கு முன்ன ரென்று தெரிய வருகின்றது.

வழி மாணுக்கர், திருவாவடுதுறைத் தாபகராகிய நமச்சிவாயதேசிகர் முதலி யோர். பரிபூரண தசை யடைந்ததினம்: சித்திரை அத்தம். இவரது திருக் கோயில் கொற்றவன்குடியில் அமைந் துள்ளது.

" எவ்வுயிரும் தன் னுயிர்போல்
எண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச்
சிந்தைவைப்ப தெந்நாளோ "

திருச்சிற்றம்பலம்